In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti

Deposition of Witness

| | |
|---|---|
| CC: | 411/2022 |
| PW: | 6 |
| காவல் நிலையம்: | கடம்பூர் |
| தேதி: | 10–11–2025 நாள்: திங்கள் கிழமை |
| பெயர்: | உமா |
| க/பெ | கண்ணன் |
| கிராமம்: | கோவில்பட்டி |
| தாலூகா: | கோவில்பட்டி |
| வேலை: | குடிமை மருத்துவர் |
| வயது: | 52 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.11.2025**

(Accused absent. Petition U/s.317 CrPC/355 BNSS filed and allowed)

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் தற்போது கோவில்பட்டி தலைமை மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் 01.04.2022 ம் தேதி 12.40 மணிக்கு கோவில்பட்டி அரசு தலைமை மருத்துமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது 65 வயது உடைய இசக்கியம்மாள் என்பவரை அவரது மகள் ராதா என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தார்.

2) நோயாளி தன்னை தனக்கு தெரிந்த ஆண் நபர் ஒருவர் 30.03.2022 ம் தேதி இரவு 11.45 மணிக்கு தனது மகளின் வீட்டில் வைத்து கடித்து காயப்படுத்தியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்த போது அவர் சுய

நினைவுடன் இருந்தார். அவரது இரத்தக்கொதிப்பு மற்றும் நாடித்துடிப்பு சீராக காணப்பட்டது. அவருக்கு பின்வரும் காயங்கள் காணப்பட்டன

1) 3x2செ.மீ அளவிளான சிதைந்த காயம் வலது மோதிர விரலின் உள்பகுதியில் காணப்பட்டது.

2) வலது மோதிர விரல் வீக்கம் காணப்பட்டது.

3) நகம் பெயர்ந்து காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது

3) 06.04.2022 ம் தேதி அவர் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட 1 முதல் 3 வரையிலான காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கப்பட்டது. **( மேற்படி காயச்சான்றிதழ் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) அ.சா1. என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வரும் போது முதுகு மற்றும் தலையில் காயம் இருந்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அ.சா1. ன் வீட்டின் முன்பு வைத்து சம்பவம் நடந்ததாக என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். அவரது மகள் வீட்டில் வைத்து தான் நடைபெற்றதாக கூறினார்.

2) காயம் பட்ட நபர் கடம்பூர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்து விட்டு மெடிக்கல் மெமோவுடன் என்னிடம் வந்ததாக கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 யை நான் பரிசோதித்த போது அவருக்கு கடித்த தடம் இல்லை என்றால் கடித்ததனால் சிதைந்த காயம் ஏற்பட வாய்ப்புள்ளது.

3) வயதிற்கு தகுந்தாற்போல் நபருக்கு நபர் பற்கள் மாறுபடும் என்றால் சரிதான். காயம் பட்ட நபர் வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தாரா என்றால் அது பற்றி என்னிடம் கூறவில்லை. காயம் ஏற்படுத்திய நபரின் வயதை குறிப்பிட்டால் தான் மேற்படி கருத்துரை வழங்கமுடியும் என்றால் சரியல்ல.

4) 1 வது காயம் வீட்டின் கதவுகளின் இடுக்குகளில் மாட்டினால் கூட ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரித்தில் அ.சா1 என்னிடம் சிகிச்சைக்காக வந்தததாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காயச்சான்று வழங்கினேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.